இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 27.07.2016

## மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டுள்ளது.

## வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (27.07.2016 முதல் 31.07.2016)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் 5 நாட்களுக்கு வானம் மேமூட்டத்துடனும், மிதமானது முதல் கன மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32° செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° முதல் 24°செ ஆகவும், காற்றின் ஈரப்பதம் 82 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளுக்கு போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக மஞ்சள் கிழங்கு அழுகலை தவிர்க்க போதிய வடிகால் வசதியை ஏற்படுத்தவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக கால்நடைகளின் குடில்களை சுற்றிலும் நீர் தேங்குவதை தவிர்ப்பதன் மூலம் கொசு உற்பத்தியை தவிர்க்கலாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் மேமூட்டம் காரணமாக நெல்லுக்கு மண்வழியாக மேலுரம் இடுவதை தவிர்க்கவும்.
- ✓ ஐந்து மாதங்கள் மற்றும் அதற்கு மேலுள்ள வாழை மரங்கள் அதிக காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்படாமல் இருக்க முட்டு கொடுக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 6 கி.மீ முதல் 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை சித்திரை பட்ட உளுந்து அறுவடையை தக்க பாதுகாப்புடன் செய்யவும்.
- ✓ அடுத்து சில தினங்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் குறுவை நெற்பயிருக்கு மேலுரம் இடுவதை தவிர்க்கவும்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 33°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 46 முதல் 70 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 முதல் 16 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- வரும் தினங்களில் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பதை தள்ளிப்போடவும். வடிகால் வசதி செய்யவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 33°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது 25°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 12 கி.மீ முதல் 18 கி.மீ வரையிலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கடந்த வாரம் பெய்த மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை கால்நடைகள் மேயவிடாமல் பாதுகாக்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 20° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை11°செ முதல் 12° செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 86 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 22 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை பெறப்பட்டதுடன் ஏலக்காய் செடிக்கு, ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில், ஏக்கருக்கு, 10 டன் தொழு உரம், 33 கிலோ யூரியா, 84 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 50 கிலோ பொட்டாஸ் உரம் இடவும்.
- ✓ ஜீலை மாதம் தேயிலை நாற்றுக்களை நட உரிய தருனமாகும். தோட்டக்கலைத் துறையில் தயாரக உள்ள தேயிலை நாற்றுக்களை மானிய விலையில் பெற்று நடவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 62 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 10 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது இறவை மரவள்ளி நடவு செய்யும் விவசாயிகள் மண் பரிசோதனையின் அடிப்படையில் உரம் இடவேண்டும். இல்லையெனில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட அளவான ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழுஉரம் இடவேண்டும். அத்துடன் 225 கிலோ சூப்பர் பாஸ்பேட்டை முற்றிலும் அடியுரமாக இடவேண்டும். 78 கிலோ யூரியா மற்றும் 160 கிலோ பொட்டாக்ஷ் ஆகியவற்றை இரண்டு பாகங்களாக பிரித்து ஒரு பகுதியை அடியுரமாகவும் மற்றொரு பாகத்தை நடவு செய்த 90 நாட்கள் கழித்து மேலுரமாகவும் இடவேண்டும. 90 நாட்களுக்கு மேல் எந்த உரமும் இட வேண்டிய அவசியமில்லை. இவ்வாறு செய்வதினால் பயிர் வளர்ச்சி மேம்படுவதுடன் மண்வளமும் காக்கப்படும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செமுதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 68 மற்றும் 84 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 8 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கத்திரிக்காய் மற்றும் தக்காளி நடவு செய்வதற்கு நிலத்தை தயார் செய்து நடவு செய்யவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 24 முதல் 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு24 முதல் 26 கி.மீவேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- *முன் பட்ட பருவ கரும்பு மற்றும் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.*
- *மழை பெறப்பட்டவுடன் தோட்டக்கலை பயிர்களாகிய அன்னாசி, வாழை, இலவங்கை பட்டை, மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களை பயிரிடலாம்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**